வந்தது. அது தற்போது ரூ. 10 ஆக மாற்றி உயர்த்தப்பட்டிருக்கிறது. பள்ளியைச் சார்ந்த ஏனைய தலைப்பு நிதியிலிருந்தும் ஒலி, ஒளி கருவி கட்டணத் தலைப்புக்கு நிதி மாற்றம் செய்து வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது. மேலும் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து நன்கொடையாகவும் தொலைக்காட்சிப் பெட்டி பெறுவதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. நெருஞ்சிப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியின் மீது அதிக அக்கறை காட்டுகின்ற மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தோடு தொடர்பு கொண்டு உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 57, திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

57—

மாயனூர் தென்கரைக்கால்வாய் கூட்டுக் குடிநீர் திட்டம்.

*9331—திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுகா கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் மாயனூர் தென்கரை கால்வாயிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் புதுப்பட்டி, வேங்கம்பட்டி, மேட்டுப்பட்டி, சரவணபுரம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் உள்ள கருப்பத்தூர் ஊராட்சி மன்றத்தில் வேங்கம்பட்டி, தாலியாம்பட்டி, மேட்டுப்பட்டி, குழந்தப்பட்டி சரவணபுரம் ஆகிய ஊர்களில் குடிநீர் இருந்தும், அங்கே உப்பு

நீராக மாறிவிட்டது. அந்தப் பகுதியில் 10 மைல் சுற்றளவுக்கு உவர் நீராக மாறியதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் நலம் கருதி அருகில் இருக்கின்ற மாயனூர் தென்கரை கால்வாயிலிருந்து ஆழ்குழாய் அமைத்து இந்த ஊர்களுக்கு கூட்டுக் குடிநீர் வழங்க ஆவன செய்யப்படுமா என கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கிராமங்களில் ஏற்கனவே பகுதி அளவும், முழுமையாகவும் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் தற்போது சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலிருக்கிற மக்களுக்கு குடிநீர் வசதி இருந்தும் அந்த நீர் உவர் நீராக இருப்பதால் தான் இந்தப் பகுதியில் இருக்கின்ற மாயனூர் தென்கரை கால்வாய்க்கு அருகில் ஆழ் குழாய் அமைத்து குடிநீர் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே உப்பு நீராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி தீவிரமான ஆய்வை மேற்கொள்ள அரசு பரிசீலனைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 58, டாக்டர் க. கோபால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

58—

பாவட்டக்குடி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்கு மேற்கூரை அமைத்தல்.

*15664: டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, பாவட்டக்குடி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் மேற்கூரை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது முடிவடையும் ?